மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 01–ம் நாள்
2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் நாள் வெள்ளிக் கிழமை

EA 2/2023 /in/EP 12/2021/in/OS 55/2013

வனிதா :: மனுதாரர் /வாதி

**/எதிர்/**

மணி (இறப்பு) :: எதிர்மனுதாரர் / 1–ம் பிரதிவாதி

1. விஜயா
2. மோகன் :: உத்தேச தரப்பினர்கள்
3. பாஸ்கரன்

------

இம்மனுவானது 08–11–2023–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. வெங்கடேஸ்வரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், (எதிர்மனுதார் /1–ம் பிரதிவாதி இறப்பு) உத்தேச தரப்பினர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. உமாபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

## உத்தரவு

எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான உத்தேச தரப்பினர்களை அசல் நிறைவேறுதல் மனுவில் 2 முதல் 4 எதிர்மனுதார்களாக சேர்க்க கோரி உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள abatement உத்தரவை ரத்து செய்து மனுதார் இத்துடன் தாக்கல் செய்துள்ள வாரிசு மனுவினை

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:05 +0530

கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் / வாதி தரப்பில் Order 22 Rule 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் / வாதி தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:

மூல நிறைவேறுதல் மனுவானது எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதிக்கு எதிராக சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்த நிலையில், எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதியான மணி கடந்த 16–11–2022–ம் தேதி காலமாகிவிட்டார். எனவே, மணியின் வாரிசுகளான 1 முதல் 3 உத்தேச தரப்பினர்களை அசல் நிறைவேறுதல் மனுவில் 2 முதல் 4 எதிர்மனுதார்களாக சேர்க்க கோரி உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள abatement உத்தரவை ரத்து செய்து மனுதார் இத்துடன் தாக்கல் செய்துள்ள வாரிசு மனுவினை கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் / வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) உத்தேச தரப்பினர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:

மூல நிறைவேறுதல் மனுவில் 1–ம் பிரதிவாதி தரப்பினர் என்பதும், உத்தேச தரப்பினர்கள் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உத்தேச தரப்பினர்களை மூல நிறைவேறுதல் மனுவில் உரிய காலத்தில் சேர்க்க ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்பதற்கு மனுதார் தரப்பில் எவ்வித விளக்கமும் கூறப்படாததாலும், காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**5)** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை.

**6)** **பிரச்னைக்கான தீர்வு:**

மனுதாரர் தனது மனுவில் மூல நிறைவேறுதல் மனுவை எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து மேல் நடத்தி வந்த நிலையில், 1–ம்

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:14 +0530

பிரதிவாதி மணி கடந்த 16–11–2022–ம் தேதி இறந்துவிட்டதாகவும், எனவே, அவரின் வாரிசுகளான 1 முதல் 3 உத்தேச தரப்பினர்களை , 2 முதல் 4 எதிர்மனுதார்களாகச் சேர்த்து மூல நிறைவேறுதல் மனுவை மேல் நடத்த அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

7) உத்தேச தப்பினர்கள் தரப்பில் 1–ம் பிரதிவாதி மணியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் அசல் வழக்கு எண்.55 / 2013 வழக்கானது மனுதார் / வாதியால் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்து வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் காரண பரிகார்த்தமாக பிராது சொத்தின் சுவாதீனத்தில் இருந்து 1–ம் பிரதிவாதி காலி செய்து வாதி வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக 03–11–2020–ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

9) மேற்கண்ட தீர்ப்பாணை உத்தரவின்படி 1–ம் பிரதிவாதி, தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க தவறியதன் காரணமாக மூல நிறைவேறுதல் மனுவானது 1–ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு மேல் நடத்தப்பட்டு வந்த நிலையில் 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதும் மனு அபிடவிட் சங்கதிகளின் மூலம் தெரியவருகிறது.

10) ஒரு வழக்கில் முழுமையான விசாரணை மேற்கொண்டு தீர்வு காணப்பட வேண்டியது சட்டப்படி அவசியமானது என்றும், அசல் வழக்கானது 1–ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, இரு தரப்பு விசாரணைக்கு பின்னர் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட மூல நிறைவேறுதல் மனுவிலும் 1–ம் பிரதிவாதி தரப்பினராக இருந்துள்ள நிலையில், அவரின் வாரிசுகள் அனைவரையும் தரப்பினர்களாகச் சேர்க்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இறந்துபோன 1–ம் எதிர்மனுதார் / 1–ம்

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:21 +0530

பிரதிவாதியின் வாரிசுகளான 1 முதல் 3 உத்தேச தரப்பினர்கள் அனைவரும் நிறைவேறுதல் மனுவிற்கு அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் 16–11–2022–ம் தேதி 1–ம் எதிர்மனுதார் இறந்துவிட்ட நிலையில் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11)** 30–03–2023–ம் தேதியில் மனுதாரர் தரப்பில் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. 1–ம் எதிர்மனுதார் அசல் நிறைவேறுதல் மனுவில் தோன்றாதரப்பினராக இருந்துள்ள நிலையில் மேல் முறையீட்டு வழக்கில் எதிர்மனுதார்கள் தரப்பில் வாரிசு மனு தாக்கல் செய்து நடவடிக்கை நிலுவையில் இருநது வந்த நிலையில் இம்மனு மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டதாக கருத இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே இம்மனு அனுமதிக்கப்படாத நிலையில் புதிய நிறைவேற்று மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு போதிய சட்டப்டியான வாய்ப்புகள் உள்ளது. அதன் மூலமாக மேலும் காலதாமதம் ஏற்படக்கூடிய சூழ்நிலை மட்டுமே உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இறந்துபோன 1–ம் எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 1 முதல் 3 உத்தேச தரப்பினர்கள் அனைவரும் அசல் நிறைவேறுதல் மனுவிற்கு அவசிய தரப்பினர்கள் என்று முடிவு செய்தும், அவ்வாறு 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாகச் சேர்க்காமல் அசல் நிறைவேறுதல் மனுவை மேல் நடத்தி உத்தரவு பெறும் பட்சத்தில் அதனால் தரப்பினர்களுக்கு எவ்வித அனுகூலமும் கிடைக்கத்தக்கதாக இருக்காது என்பதாலும், மனுதார் இம்மனுவுடன் வாரிசு மனுவையும் தாக்கல் செய்துள்ளதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என முடிவு செய்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**12)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | EA 2/2023 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:28 +0530

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 17-11-2023 தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:38 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

District Munsif Court, Uthamapalayam.
E.A.2/2023
in
EP 12/2021/in/
OS 55/2013
FAIR / DRAFT ORDER
Date : 17-11-2023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 01–ம் நாள்
2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் நாள் வெள்ளிக் கிழமை

EA 2/2023 /in/EP 12/2021/in/OS 55/2013

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கீழக்கூடலூர் கிராமம், மஜரா கருநாக்கமுத்தன்பட்டி கிராமம், வார்டு–1, பிள்ளையார் கோவில் தெரு, கதவு எண்.231–ல் வசித்து வந்து அப்பால் திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, பழனி டவுன், வார்டு–8, இந்திரா நகர், கதவு எண்.2–ல் வசித்து வந்து அப்பால் தற்சமயம் மதுரை மாவட்டம், மதுரை டவுன், புதுவிளாங்குடி , வாழவந்தான் தெரு, ராமமூர்த்தி நகர், பிளாட் எண்.16–ல் இருக்கும் திருமலைமுத்துப்பிள்ளை குமாரத்தியும், செந்தில்முருகன் மனைவியுமான இந்து சுமார் 35 வயதுள்ள வனிதா. |

..... மனுதாரர் / வாதி

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கருநாக்கமுத்தன்பட்டி கிராமம், வார்டு எண்.4, மெயின்ரோட்டில் இருக்கும் லேட்.சீனித்தேவர் குமாரர் இந்து சுமார் 70 வயதுள்ள மணி (இறப்பு) |

...... எதிர்மனுதாரர் / 1–ம் பிரதிவாதி

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கருநாக்கமுத்தன்பட்டி கிராமம், வார்டு எண்.4, மெயின்ரோட்டில் வசித்து வரும் லேட். மணி மனைவி இந்து சுமார் 61 வயதுள்ள விஜயா. |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கருநாக்கமுத்தன்பட்டி கிராமம், வார்டு எண்.4, மெயின்ரோட்டில் வசித்து வரும் லேட். மணி குமாரர் இந்து சுமார் 47 வயதுள்ள மோகன். |
| 3 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கருநாக்கமுத்தன்பட்டி கிராமம், வார்டு எண்.4, மெயின்ரோட்டில் வசித்து வரும் லேட். மணி குமாரர் இந்து சுமார் 44 வயதுள்ள பாஸ்கரன். |

.... உத்தேச தரப்பினர்கள்.

எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான உத்தேச தரப்பினர்களை அசல் நிறைவேறுதல் மனுவில் 2 முதல் 4 எதிர்மனுதார்களாக சேர்க்க கோரி உரிய காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள abatement உத்தரவை ரத்து செய்து மனுதார் இத்துடன் தாக்கல் செய்துள்ள வாரிசு

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:46 +0530

மனுவினை கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் / வாதி தரப்பில் Order 22 Rule 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30–03–2023 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 20/– செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 08–11–2023–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. வெங்கடேஸ்வரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், (எதிர்மனுதார் /1–ம் பிரதிவாதி இறப்பு) உத்தேச தரப்பினர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. உமாபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

## நிறைவேற்றாணை

| | |
|---|---|
| 1. | EA 2/2023 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

## செலவுத் தொகை இல்லை

2023–ம் வருடம் நவம்பர் மாதம் 17–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.11.17 16:24:56 +0530

*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*உத்தமபாளையம்.*

District Munsif Court, Uthamapalayam.
E.A.2/2023
in
EP 12/2021/in/
OS 55/2013
EX ORDER
Date : 17–11–2023